# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

# ஆண்டு - 4 (Year 4)

## 1/09/2015 - 31/08/2016 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

## மரங்களைப் பாதுகாப்போம்

இயற்கை அன்னையின் இன்றியமையாத கொடைகளில் ஒன்று மரங்கள். பூமிப் பந்து எங்கும் பச்சைப்பசேல் என்று அழகுற காணப்படும் மரங்கள் மனிதனுடைய வாழ்விற்கும், இயற்கையின் சமநிலைக்கும் மிக முக்கியமானவை. மரங்கள், செடிகள், கொடிகள் என பல வடிவங்களில் மரங்கள் வளர்கின்றன. மரங்களில் இருந்து மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உணவு கிடைக்கின்றது. மரங்களை வளர்ப்பதனால் பூமிக்கு மழை கிடைக்கின்றது. மரங்களைத் தாவரங்கள் என்றும் அழைக்கலாம். விஞ்ஞான ஆய்வுகளில் தாவரங்கள் ஒட்சிசனை வெளியேற்றி காபனீர் ஓட்சைற்றை உள்வாங்குகின்றன. இது இயற்கைக்கு சாதகமான செயலாகும்.

விலங்குகளின் வாழ்விடமான காடுகள் மரங்கள் சூழ்ந்த இயற்கையின் சூழல் தொகுதி ஆகும். விலங்குகள் அச்சமின்றியும், தமது உணவைத் தாமே பெற்று உண்பதற்கும் இக் காடுகளைப் பயன்படுத்துகின்றன.

மரங்கள் இன்று அதிக அளவில் அழிக்கப்படுவதனால் பூமி வெப்பமடைகின்றது. எரிமலைகள் கூடுதலாக வெடிக்கின்றன. மழை குறைவடைகின்றது.

எனவே, அழகுக்கும், தேவைக்கும், அறிவியலுக்கும் உதவக்கூடிய மரங்களைப் பாதுகாப்போம்.